நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## <u>சாதாரண கூட்டம் 28/06/2019, வெள்ளிக்கிழமை</u>

| |
|---|
| <u>பொருள் எண். 1</u><br>நெல்லியாளம் நகராட்சியின் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட இடத்தில் உள்ள வணிக வளாகத்தின் மேல் தளத்தில் தோட்டகலை அலுவலர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்கு 33.15 ச.மீட்டர் அளவு உள்ள அறை அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறையை தோட்டக்கடை துணை இயக்குநர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம் |
| <u>**பொருள் எண். 2**</u><br>அரசாணை நிலை எண்.84, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (இ.சி.உ) துறை நாள்.25.06.2018–ன்படி 01.01.2019 முதல் தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தலுக்கு பின் தூக்கியெறியக் கூடிய பல்வேறு வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார கேடு ஏற்படுவதை முற்றிலுமாக தவிர்க்கவும், நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி பகுதிகளிலும் 19 வகையான பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்கவும், விற்பனை செய்யவும் தடை செய்து, நீலகிரி மாவட்ட அரசிதழில் (அரசிதழ் எண்.2, நாள்.09.05.2018) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை தவிர பயன்பாட்டில் உள்ள இதர பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பறிமுதல் செய்யப்படும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் சேகரிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கா வண்ணம் உரிய முறையில் அழிப்பதற்கும், அதன் அதிகபட்ச பயன்களை பெறும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதி 2016–ன் விதி 5, 6 மற்றும் 7–ல் தார் சாலை பணிகளில் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் ஊக்குவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதி 2016 (Plastic Waste Management Rules 2016)–ன் பிரிவு 5, 6 மற்றும் 7–ற்கிணங்க, மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கும், அதன் அதிகபட்ச பயன்களை பெறும் பொருட்டும் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் பல்வேறு துறைகளின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் தார்சாலை பணிகளில் அரைக்கப்பட்ட பிளாஸ்டிக்கினை இந்திய அரசின் தேசிய ஊரக சாலைகள் மேம்பாட்டு முகமை, பரிந்துரைத்த 8 விழுக்காட்டுக்கு மிகாமல் தாருடன் கலந்து பயன்படுத்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u><br>அனுமதி அளிக்கலாம். |

**பொருள் எண்.3**

நீலகிரி மாவட்டம் ஒரு சுற்றுலா மாவட்டம் என்பதால் நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை மேலும் மேம்படுத்திட பல்வேறு வகையான நடவடிக்கைகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், விளம்பர பலகைகள் / பேனர்கள் பதாகைகள் வைப்பது மற்றும் பொது இடங்களில் சுவரொட்டிகள் வைப்பது மற்றும் ஒட்டுவது தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகள் அரசால் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் 1959–ம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்கள் (சேதமேற்படுத்துவதை தடுத்தல்) சட்டம் (The Tamilnadu Open Places (Prevention fo Disfigurement) Act 1959, உயர் நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் அரசின் உத்தரவிற்கிணங்க தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு தனியார்அமைப்புகளால், பொது இடங்களிலும், தனியார் இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவது, நீலகிரி மாவட்டத்தின் அழகினையும், சுற்றுச்சூழலையும் சீர்குலைப்பதாக உள்ளது. எனவே, நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலினை கருத்தில் கொண்டு, நெல்லியாளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள பொது இடங்கள், இயற்கை வளங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு நபரும் / அமைப்பும் சுவரொட்டிகள் வைக்கவும், சுவரொட்டிகள் ஒட்டவும் தடை விதித்தும், மேலும், தடையை மீறி சுவரொட்டிகள் வைப்பவர் மற்றும் ஒட்டுபவர் மீது தமிழ்நாடு பொது இடங்கள் (சேதமேற்படுத்துவதை தடுத்தல்) சட்டம் 1959–ன் கிணங்க ரூ.5000/– சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மூலம் அபராதம் விதிக்க தீர்மானிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.4– பணி எண்.1**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு சொந்தமான மினி ஆட்டோ வாகனங்கள் TN43Y8679, மற்றும் TN43Y8673 ஆகிய இரண்டு வாகனத்திற்கும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து தகுதி சான்று பெறும் பணிக்கு 10/06/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்தவரின்பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ. | |
|---|---|---|---|
| | | TN43Y8679 | TN43Y8673 |
| 1 | பிரண்ட்ஸ் ஆட்டோ கேரேஜ், பந்தலூர் | 15950/– | 16300/– |
| 2 | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் | 15300/– | 15800/– |
| 3 | SRR ஆட்டோ கேரேஜ், கூடலூர் | 16150/– | 16600/– |

**அலுவலககுறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.4– பணி எண்.2**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு சொந்தமான டிப்பர் லாரி வாகனம் TN43Z4515 வாகனத்திற்கும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து தகுதி சான்று பெறும் பணிக்கு 10/06/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்தவரின்பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | பிரண்ட்ஸ் ஆட்டோ கேரேஜ், பந்தலூர் | 43350/– |
| 2 | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் | 42200/– |
| 3 | SRK ஆட்டோ கேரேஜ், கூடலூர் | 42850/– |

**அலுவலககுறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் பெற வறுமைக்கோடு பட்டியலில் பெயர் சேர்த்து பட்டியல் எண் வழங்ககோரி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு வறுமைக்கோடு பட்டியல் எண் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | பட்டியல் எண் |
|---|---|---|
| 1 | திருமதி.பெரியம்மா, க/பெ.அருணாசலம், க.எண்.15/633, இன்கோநகர், பந்தலூர் | OAP BPL No.150 |
| 2 | திருமதி.ஆ.மஞ்சுளா, க/பெ.ஆறுமுகம்,(லேட்), க.எண்.1/129, நெல்லியாளம், உப்பட்டி. | OAP BPL No.151 |
| 3 | திரு.இராஜேந்திரன், த/பெ.மருதை, க.எண்.5/555, அட்டிக்கொல்லி, புளியம்பாறை, மரப்பாலம். | OAP BPL No.152 |
| 4 | திருமதி.லட்சுமி, க/பெ.கோவிந்தன், க.எண்.13/137, அட்டிவயல், பந்தலூர். | OAP BPL No.153 |
| 5 | திருமதி.அமிர்தம், க/பெ.சன்னாசி, க.எண்.13/34FR, அண்ணாநகர், பந்தலூர். | OAP BPL No.154 |
| 6 | திருமதி.செல்லம்மா, க/பெ.மும்முடியாண், க.எண்.19/122C1, பெருங்கரை, உப்பட்டி | OAP BPL No.155 |
| 7 | திருமதி.பீவி, க/பெ.மூசா, க.எண்.11/390, நீர்மட்டம், தேவாலா | OAP BPL No.156 |
| 8 | திரு.பெரியசாமி, த/பெ.ஆறுமுகம், க.எண்.9/164C, தேவாலா | OAP BPL No.157 |
| 9 | திரு.A.சுப்ரமணியம், த/பெ.அறிவாசகம், க.எண்.4/92B, கைலாசம் காலணி, தேவாலா. | OAP BPL No.158 |
| 10 | திரு.உதயகுமார், த/பெ.ராஜீ, க.எண்.13/106, அட்டி, பந்தலூர் | OAP BPL No.159 |
| 11 | திரு.கணேசன், த/பெ.சுப்பையா, க.எண்.14/363, இந்திராநகர், பந்தலூர் | OAP BPL No.160 |
| 12 | திரு.சபரிகிரீசன், த/பெ.பார்க்கவன், க.எண்.1/8D1, குன்றில்கடவு, உப்பட்டி | OAP BPL No.161 |

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.6**

நெல்லியாளம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் பந்தலூர் பஜார் பகுதியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் எரிவாயு அடுப்பு, மாவு அரைக்கும் இயந்திரம், எரிவாயு அடுப்பு பைப் லைன்கள் மற்றும் மின்சாதன பொருட்கள் பழுதடைந்துள்ளதை பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு 12/06/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்தவரின்பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | M/s.ரம்யா எலக்ட்ரிக்கல்ஸ், பந்தலூர் | 80990/– |
| 2 | M/s.ரவி எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் அன் சவுண்டு சிஸ்டன், பந்தலூர் | 81300/– |
| 3 | M/s.துரைசாமி, ரிசாந்த் எலக்ட்ரிக்கல்ஸ், பந்தலூர் | 79900/– |

**அலுவலககுறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள M/s.துரைசாமி, ரிசாந்த் எலக்ட்ரிக்கல்ஸ், பந்தலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.7</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் தற்போது பயன்பாட்டிலுள்ள மின்சாதன பொருட்கள், கழிவறைகளிலுள்ள தண்ணீர் குழாய்கள், கதவுகள் ஆகியவை பழுதடைந்துள்ளதை பழுதுநீக்கம் செய்யும் பணி மற்றும் கார்பென்டரிங் பணிகள் செய்ய 12/06/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிகள் விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | குட்வில் எண்டர்பிரைசஸ், பந்தலூர் | ரூ.69950/– |
| 2 | விக்னேஷ்வரா ரேடியோஸ், பந்தலூர் | ரூ.70500/– |
| 3 | பிரியா ஷாப்பிங் சென்டர், பந்தலூர் | ரூ.70800/– |

**<u>அலுவலககுறிப்பு</u>**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள குட்வில் எண்டர்பிரைசஸ், பந்தலூர்நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.8</u>**

நெல்லியாளம் நகராட்சி உள்ளாட்சி தேர்தலுக்கான சட்டமன்ற வாக்காளர் பட்டியல் வருவாய்துறை (மாவட்ட ஆட்சியர் அலுவலகம்) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் வைத்து வார்டு வாரியாக நெல்லியாளம் நகராட்சியில் புதியதாக வரையறுக்கப்பட்டுள்ள வார்டு எண்களின்படி வாக்காளர் பட்டியல் பிரிக்க வேண்டியுள்ளதால், தற்போது நகராட்சி பணியாளர்கள் குறைவாக உள்ளதால் வெளியாட்கள் வைத்து தேர்தல் வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளதாலும், வாக்குச்சாவடிகள் மற்றும் புகைப்படம் எடுக்கவும் வரைபடங்கள் தயாரிக்கவும், அதற்குன்டான உத்தேச செலவுத்தொகை ரூ.2.50/– லட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி அளிக்கலாம்.

**<u>பொருள் எண்.9</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கட்டிடத்திற்கும், உப்பட்டி அட்டி பகுதியில் உள்ள குடிநீர் பம்பு அறைக்கும் மின் இணைப்பு பெறவும், ஒயரிங் பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.1.50/– லட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி அளிக்கலாம்.

**<u>பொருள் எண். 10 – பணி எண்.1</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய மின் மோட்டார்கள் 110 டீசல் எஞ்சின் 10, மொத்தம் 120 குடிநீர் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு அறைகளிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் டீசல் எஞ்சின்கள் இயக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த பகுதிகளிலுள்ள நபர்களை வைத்து மின்மோட்டார்கள் இயக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2018-2019ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தகாலம் 30.06.2019 உடன் முடிவடைந்துவிட்டதால் 01.07.2019 ஒரு மாதத்திற்கு அதே ஒப்பந்ததாரரே பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.78000/-த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி அளிக்கலாம்

**பொருள் எண். 10 – பணி எண்.2**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய மின் மோட்டார்கள் 110 டீசல் எஞ்சின் 10, மொத்தம் 120 குடிநீர் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு அறைகளிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் டீசல் எஞ்சின்கள் இயக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த பகுதிகளிலுள்ள நபர்களை வைத்து மின்மோட்டார்கள் இயக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2018-2019ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தகாலம் 30.06.2019 உடன் முடிவடைந்துவிட்டதால் 01.08.2019 முதல் 31.07.2020 முடிய மேற்படி பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.10.00/-த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்ய அனுமதி அளிக்கலாம்

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சி தலைவரின் பயன்பாட்டிற்கு சொந்தமான TN.43 Y.0513 எண் கொண்ட புதிய பேட்டரி வாங்கும் பணிக்கு /05/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | S.S.Auto Electricals | 8700/– |
| 2 | San Auto Electricals | 8750/– |
| 3 | Elite Auto Electricals | 9350/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள S.S.Auto Electricals நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.12**

2018-2019ம் ஆண்டு சிறப்பு பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் புஞ்சவயல் மெயின் சாலை முதல் ஆதிதிராவிடர் காலனியில் சிமெணட் சாலை மற்றும் பக்கசுவர் அமைத்தல் பணிக்கு ரூ.8.80 இலட்சத்திற்கு 13.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. சந்திரசேகரன் | 0.07 % குறைவு |
| 2 | திரு. குமார் | 0.69% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. சந்திரசேகரன் என்பவர் 0.07 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.13**

2018-2019ம் ஆண்டு சிறப்பு பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பந்தலூர் முதல் ரிச்மெணட் தொழிலாளர் குடியிருப்பு சிமெணட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.8.00 இலட்சத்திற்கு 13.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.தேவேந்திரன் | 0.03 % குறைவு |
| 2 | திரு.பாபுவர்கீஸ் | 0.74 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.தேவேந்திரன் என்பவர் 0.03 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.14**

2018-2019ம் ஆண்டு சிறப்பு பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் தேவாலா அட்டி முதல் கைலாசம் காலனி வரை சிமெண்ட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.8.90 இலட்சத்திற்கு 13.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.செய்தலவி | 0.02 % குறைவு |
| 2 | திரு. அசீஸ் | 0.52 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.செய்தலவி என்பவர் 0.02% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.15**

2018-2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பந்தலூர் இன்கோநகருக்கு சிமெண்ட் சாலை, தடுப்பு சுவர் மற்றும் கல்வெர்ட் அமைத்தல் பணிக்கு ரூ.9.50 இலட்சத்திற்கு 13.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.குமார் | 0.09 % குறைவு |
| 2 | திரு.சந்திரசேகரன் | 0.98 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.குமார் என்பவர் 0.09 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.16**

2018-2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் உப்பட்டி பூதானக்குன்னு லட்சுமணன் பம்பு அறை அருகில் இன்டர்லாக் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.9.80 இலட்சத்திற்கு 13.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.செய்தலவி | 0.03 % குறைவு |
| 2 | திரு.அசீஸ் | 0.59 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.செய்தலவி என்பவர் 0.03% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.17**

2018-2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பந்தலூர் டியூஸ் பள்ளி, அட்டி சாலை தடுப்பு சுவர் அமைத்தல் பணிக்கு ரூ.6.50 இலட்சத்திற்கு 13.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. அசீஸ் | 0.04 % குறைவு |
| 2 | திரு. ஜெய்சன் | 0.66 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.அசீஸ் என்பவர் 0.04% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.18**

2018-2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் நகராட்சி அலுவலகம் மற்றும் அம்மா உணவகத்திற்கு எரிவாயு சிலிண்டர் பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.1.70 இலட்சத்திற்கு 28.06.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | Fire stop Engineering | 0.06 % குறைவு |
| 2 | Maga Engineering | 8.12 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Fire stop Engineering என்பவர் 0.06% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

**பொருள் எண்.19**

2018-2019ம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நாடுகாணியில் அங்கன்வாடி கட்டிடம் பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.2.00 இலட்சத்திற்கு 27.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.ஷாஜி | 0.26 % குறைவு |
| 2 | திரு. பாபுராஜ் | 0.72 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஷாஜி என்பவர் 0.26% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

**பொருள் எண்.20**

2017-2018ம் ஆண்டு நுழைவு வரி திட்டத்தின் கீழ் பொன்னம்மா பள்ளம் ஆதிவாசி காலனியில் சிமெணட் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.6.50 இலட்சத்திற்கு 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சந்திரசேகரன் | 0.03 % குறைவு |
| 2 | திரு. குமார் | 0.16% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சந்திரசேகரன் என்பவர் 0.03 % மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.21**

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய டிரான்ஸ்பாரம் அமைக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்கு சுட்சுகள் பிரிக்கப்படுவதால், தெருவிளக்குகள் எரியாத வண்ணம் உள்ளவைகளுக்கு தனிதனியாக சுவிட்சு அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.22**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்கண்ட மின் மோட்டார்க்ள் சர்வீஸ் வயர்கள், பம்புகள், பைப்புகள் பழுதடைந்துள்ளன இம்மின்மோட்டார்கள் மூலம் தினசரி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன. பொது மக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி இப்பணியினை செய்வதற்கு ஆணையாளரின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. தேவாலா அட்டி மோட்டார் பழுது
2. கீழ்நாடுகாணி மோட்டார் பழுது
3. காட்டிமட்டம் மோட்டார் பழுது
4. சேலக்குன்னா மோட்டார் பழுது
5. காட்டிக்குன்னு மோட்டார் பழுது
6. அத்திமாநகர் பைப் மாற்றம்
7. தேவகிரி **– 1 பைப் மாற்றம்**
8. தேவகிரி **– 2 மோட்டார் பழுது**
9. புளியம்பாரா சர்வீஸ் வயர் மாற்றம்
10. பூதானக்குன்னு சர்வீஸ் வயர் மாற்றம்
11. ராமசாமி காலனி சர்வீஸ் வயர் மாற்றம்
12. பெருங்கரை பைப்பு மாற்றம்
13. கோட்டகுன்னு மோட்டார் பழுது
14. பூதானக்குன்னு எண்.2 மோட்டார் பழுது
15. தேவகிரி -2 சர்வீஸ் ஒயர் மாற்றம்

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண். 23**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| | | |
|---|---|---|
| 1. | பொன்னூரில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | ரூ.4.00 |
| 2. | பொன்னூரில் சிமெண்ட் நடைபாதை மற்றும் பக்கசுவர் அமைத்தல் | ரூ.9.00 |
| 3. | நகராட்சிக்குட்பட்ட பம்பு அறைகள் பராமரிப்பு மற்றும் கூரை அமைத்தல் | ரூ.6.00 |
| 4. | ஏலமன்னா 50 குடியிருப்பு முதல் மெயின் சாலை சிமெண்ட் சாலை | ரூ. 7.50 |
| 5. | கைலாசம் காலனி கழிப்பிடம் அருகில் சிமெண்ட் சாலை அமைத்தல் | ரூ.9.50 |
| 6. | பாண்டியாரில் கல்வெர்ட் அமைத்தல் | ரூ.2.00 |
| 7. | கூமூலையில் சமுதாயக்கூடம் பராமரிப்பு செய்தல் | ரூ.8.00 |
| 8. | சீனக்கொல்லி சிமெண்ட் சாலை அமைத்தல் | ரூ.6.00 |
| 9. | ரவுஸ்டன்மலையில் சிமெணட் சாலை அமைத்தல் | ரூ.6.00 |
| 10. | ஏலமன்னா ஆதிவாசி காலனியில் (குரும்பர்) குடிநீர் திட்டம் அமைத்தல் | ரூ.5.50 |
| 11. | சேலக்குன்னா சர்ச் அருகில் சிமெணட் சாலை அமைத்தல் | ரூ.5.00 |
| 12. | சேலக்குன்னாவில் சிமெணட் சாலை அமைத்தல் | ரூ.7.25 |
| 13. | புளிம்பாரையில் சிமெணட் நடைபாதை அமைத்தல் | ரூ.6.00 |

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.24 – பணி எண்.1**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (அதி3) துறை, அரசாணை (நிலை) எண்.20, நாள்.13/02/2019–ன்படி வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளகுடும்பங்களை கணக்கெடுக்கும் பணிக்கு DBC பணியாளர்களை ஈடுபடுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனவே இப்பணியாளர்களை கொண்டு விரைவாக கணக்கெடுக்கும் பணி முடிக்கிவிட வேண்டும் என மாநில அளவிலான காணொளி காட்சி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே பணியின் அவசர, அவசியம் கருதி 40 DBC பணியாளர்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் செக்சன் 15–ன்படி விலைப்புள்ளி அறிவிக்கப்பட்டு, M/s.கிரீன் டெக் கார்பரேசன் நிறுவனத்தின் மூலம் பணி செய்யப்பட்டு ரூ.384480/– தொகை வழங்கப்பட்டது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.24 – பணி எண்.2**

பாராளுமன்ற தேர்தல் 2019 வாக்குச்சாவடிகளில் ஊனமுற்றோர் பயன்படுத்த வீல்சேர் வழங்கப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் செக்சன் 15–ன்படி விலைப்புள்ளி அறிவிக்கப்பட்டு, M/s.கிரீன் டெக் கார்பரேசன் நிறுவனத்தின் மூலம் பணி செய்யப்பட்டு ரூ.55072/– தொகை வழங்கப்பட்டது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.24 – பணி எண்.3**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகள், நகரப் பகுதிகள், பொது இடங்கள், குப்பைக்கிடங்கு உள்ளிட்ட பகுதிகளில் ஏற்படும் சுகாதார குறைபாடுகள், பருவ மழையினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் சுகாதார பணிகளை மேற்கொள்ள கிருமி நாசினிகள் மற்றும் தளவாடப் பொருட்கள் கொண்டு பயன்படுத்தப்பட வேண்டும். தற்போது பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் செக்சன் 15–ன்படி விலைப்புள்ளி அறிவிக்கப்பட்டு, M/s.கிரீன் டெக் கார்பரேசன் நிறுவனத்தின் மூலம் பணி செய்யப்பட்டு ரூ.870232/– தொகை வழங்கப்பட்டது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.24 – பணி எண்.4**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் மினி லாரி TN438153 எண் கொண்ட வாகனத்திற்கு டயர்கள் தேய்மானமாகியுள்ளது. ஆகவே ஆறு டயர்கள் ரீபெல்ட் செய்யும் பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.24000/–க்கும், விலைப்புள்ளி அறிவிப்பு வழங்கவும் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.24 – பணி எண்.5**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் மினி ஆட்டோ TN43Y8897 எண் கொண்ட வாகனத்திற்கு 14/08/2019 தேதியுடன் தகுதிச் சான்று (FC) காலாவதியாகிறது. ஆகவே வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து தகுதிச்சான்று பெறும் பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.19000/–க்கும், விலைப்புள்ளி அறிவிப்பு வழங்கவும் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
நெல்லியாளம் நகராட்சி